மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Water Bodies and Water Management in Ancient Tamil Literature

**I. Michael Raj**

**Ph.D Scholar, Postgraduate and Research Department of Tamil, Pachaiyappa's College, Chennai, India**

Manuscript ID : **MT127A0131**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 11.01.2023
Revised: 06.02.2023
Accepted: 20.02.2023
Published: 02.03.2023

Pages : 71-77

DOI: 10.5281/zenodo.7690477



**ABSTRACT:**

Water bodies refer to natural or artificial bodies of water, such as lakes, rivers, oceans, and wetlands. Water management refers to the process of managing the use, distribution, and conservation of water resources to meet the needs of society and the environment. That have been important themes in tamil literature for centuries, with ancient texts emphasizing their cultural and societal significance, and more recent literature highlighting the need for sustainable water management practices. This article examines the ability of the Tamil peoples to save water and bring the idea of water management to the world.

**KEYWORDS:**

Water, Watershed, Hydrology, Water Management

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-3 பதிப்பு-1 மார்ச் 2023 | E-ISSN: 2583-0449

# பழந்தமிழ் இலக்கியங்களில் நீர்நிலைகளும், நீர் மேலாண்மையும்

**இ. மைக்கேல் ராஜ்,**
*முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*முதுகலை மற்றும் ஆராய்ச்சி தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை, இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**நீர்நிலைகள் என்பது ஏரிகள், ஆறுகள், பெருங்கடல்கள் மற்றும் ஈரநிலங்கள் போன்ற இயற்கையான அல்லது செயற்கையான நீர்நிலைகளைக் குறிக்கும். நீர் மேலாண்மை என்பது சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நீர் ஆதாரங்களின் பயன்பாடு, விநியோகம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை நிர்வகிக்கும் செயல்முறையைக் குறிக்கிறது. நீர்நிலைகள் மற்றும் நீர் மேலாண்மை ஆகியவை தமிழ் இலக்கியத்தில் பல நூற்றாண்டுகளாக முக்கியமான கருப்பொருளாக உள்ளன, பண்டைய நூல்கள் அவற்றின் கலாச்சார மற்றும் சமூக முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன, மேலும் சமீபத்திய இலக்கியங்கள் நிலையான நீர் மேலாண்மை நடைமுறைகளின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன. அத்தயை நீரைச் சேமித்து வைத்து நீரியல்மேலாண்மைச் சிந்தனையை உலகிற்குக் கொணர்ந்தவர்கள் தமிழர்கள் அவர்களின் நீர் மேலாண்மைத் திறனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.**

## கருச்சொற்கள்

**நீர், நீர்நிலை, நீரியல், நீர் மேலாண்மை**

## முன்னுரை

உணவுப் பொருள்களை விளைவிக்கத் தேவையான ஊக்கியாக, அடிப்படையாக இருக்கும். உணவுப் பொருள் இல்லாத போது தானே உணவாக மாறும். இந்த அற்புத ஆற்றல் கொண்டது மழை நீர். அந்த மழை நீரே உயிர்களின் அடிப்படை.

**“மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை; மழையும்**
**தவமிலார் இல்வழி இல்லை; தவமும்**
**அரசிலார் இல்வழி இல்லை; அரசனும்**
**இல்வாழ்வார் இல்வழி இல்”** **நான்மணிக்கடிகை.** 46

என்று பகர்கின்றது நான்மணிக்கடிகை.

உலக மக்களுக்கு மழையில்லையேல் நல்வாழ்வு இல்லை. அந்த மழையும் நல்லோர் இல்லா இடங்களில் பெய்யா. அது போன்று தான் நல்லோர் ஆட்சி செய்யும் நாட்டில் மழையும் பெய்யும் என்று மழையின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

மனித குலத்திற்கு இயற்கை வழங்கிய ஓர் அடிப்படையான பொருள் நீர். நீரிலேயே முதல் உயிர் உருவானதாக கூறுகின்றது அறிவியல். நீரே உயிர்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. நீர் இல்லாவிடில் உயிர்கள் தோன்றி இருக்காது. முதன் முதலில் ஒரு செல் உயிரி நீரிலேயே தோன்றியது. பின்னர் படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுப் பல செல் உயிர்கள் உருவாகின என்பது அறிவியலின் கண்டுபிடிப்பு.

**“வான்முகந்த நீர் மழைப் பொழியவும்**
**மழைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்**
**மாரிபெய்யும் பருவம் போல் நீரின்றும்**
**நிலத்துஏற்றவும் நிலத்தினின்றுநீர்ப் பரப்பவும்**
**அளந்து அறியாப் பல பண்டம்”** **பட்டினப்பாலை.** 126-131

என்ற பட்டினப்பாலை வரிகளின் மூலமும், கடல் நீர் ஆவியாகி, மழையாகப் பொழிந்து, அது ஆறுகளின் வழியாக மீண்டும் கடலை அடையும் என்ற சுழற்சி முறையை என்பதைப் பழந்தமிழர் அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

பழந்தமிழர் நீர்வளம் குறித்த தொழில்நுட்ப அறிவில் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர். பண்டையத் தமிழர்களின் நீர் மேலாண்மை குறித்த தரவுகள் தொல்காப்பியத்திலிருந்தே கிடைக்கின்றன. இதன் வழி தமிழ்ச் சமூகம் நீரை உயிரினும் மேலாக மதித்து, நீரைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளது. தமிழரின் நீர் மேலாண்மை அறிவியலை அறுதியிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், இப்போது ஆய்வாளர்களால் குறிக்கப்படும் நாகரிக காலத்திற்கும் முற்பட்டது பண்டைத் தமிழரின் வேளாண் தொழில் நுட்பம் என்பதில் ஐயமில்லை.

தொடக்கக்கால தமிழ்ச் சமூகம் நீரை வானிலிருந்து பெற்றுப் பயன்படுத்தியுள்ளது. அந்நாளில் ஆறுகளில் ஓடும் நீரைத் தேக்கி வைத்து பயன்படுத்தும் தொழில்நுட்பம் வளரவில்லை. படிப்படியாக மனித சமுதாயம் நாகரிக வளர்ச்சி அடைந்த போது ஆறுகளில் இருந்தும், நீர் நிலைகளில் இருந்தும் நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யத் தொடங்கியுள்ளனர்.

படிப்படியான வளர்ச்சியில் ஆறுகளில் ஓடும் நீரைத் தேக்கி வைத்து, நீராதாரங்களை உருவாக்கி வேளாண் செய்யும் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளது. “வருவிசை புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமையானும்” தொல்.

பொருள்: 65 என்று தொல்காப்பியர் ஆறுகளில் அணைக் கட்டி பாசனம் செய்ததைக் குறிப்பிடுகின்றார்.

**"வருபுனற் கற்சிறை கடுப்ப விடையறுத்**
**தொன்னா ரோட்டிய செருப்புகன் மறவர்"** **மதுரைக் காஞ்சி.** 725-726

என்ற மதுரைக் காஞ்சியின் வரிகளாலும் கற்சிறை என்பது பெருகி வரும் ஆற்றின் குறுக்கே, நீரைத் தடுத்து நிறுத்தும் கற்களால் ஆன கட்டுமானம் அதாவது அணைக்கட்டு என்பதை அறிய முடிகின்றது.

## வாழ்வியலில் நீர் நிலைகள்

பொதுவாக உயிர் வாழ நீர் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. நீர் நிலைகளைச் சுற்றியே பண்பாட்டு வளர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அந்த வகையில் வாழ்வியலில் நீர் நிலைகள் முக்கிய பங்காற்றியுள்ளன. அகப்பாடல்களில் களவும், காதலும் கூடி மகிழும் இடங்களாக நீர்நிலைகள் சுட்டப்பெறுகின்றன. அதே நேரத்தில் புற இலக்கியங்களில் வளமையின் அடையாளமாகவும், சிறந்த ஆட்சி நிர்வாகத்தின் அடையாளமாகவும் நீர்நிலைகள் காட்டப்பட்டுள்ளன.

**"யாறும் குளனும் காவும் ஆடிப்**
**பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப"** **தொல். நூற்பா.** 1137

என்ற தொல்காப்பிய நூற்பாவும் தலைவனும், தலைவியும் நீராடி மகிழ்தற்குரிய இடமாகக் காட்டுகிறது.

இத்தகு புனல் விளையாட்டின் போது சிவறி, வட்டு, எக்குவ போன்ற கருவிகளைப் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

## இலக்கியங்களில் நீர் நிலைகள்

சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழரின் நீர் மேலாண்மையை நன்கு விளக்குகின்றன. பண்டை தமிழரின் நீர் மேலாண்மை நுட்பங்கள் மற்றும் முறைகள் குறித்து சங்க இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் ஏராளமான செய்திகள் காணப்படுகின்றன.

சங்க காலத்தில் நீர் நிலைகளைப் பெருக்கி, நாட்டை வளப்படுத்துவதே ஒரு ஆட்சியாளரின் தலையான கடமையாக இருந்து வந்தது. நீர் நிலைகளைச் சிறந்த முறையில் பெருக்கியவனையும், பராமரித்தவனையுமே புலவர்கள் புகழ்ந்துள்ளனர்.

**“நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவன் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே”** **புறம்.** 18, 28-30

என்ற புறநானூற்றுப் பாடலின் மூலம் வானிலிருந்து பெய்யும் மழை நீரைச் சேமித்து, ஏரிகள், குளங்கள் வெட்டி, பாசனத்திற்குப் பயன்படும் வகையில் நீராதாரத்தைப் பெருக்குவதே ஒரு மன்னனின் தலையாய கடமை என்பது அந்நாளில் பின்பற்றப்பட்டது. அவனையே உலகம் போற்றியுள்ளது. பின்பற்றியுள்ளது. அவ்வாறு செய்யாத அரசனை அக்காலத்தில் இகழ்ந்துள்ளனர்.

தமிழர்கள் நீரை எந்தளவிற்குப் போற்றினர் என்பதை இலக்கியங்களே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. திருவள்ளுவர் வான்மழை என்ற அதிகாரத்தைக் கடவுள் வாழ்த்திற்கு அடுத்தாற் போல் வைத்துப் பாடியுள்ளார். இளங்கோவடிகளோ திங்களையும், கதிரவனையும் போற்றும் போது வான்மழையையும் சேர்த்தே போற்றியுள்ளார். எட்டுத்தொகைகளும், பத்துப்பாட்டுக்களும், ஐம்பெருங்காப்பியங்களும் மாமழையைப் போற்றிப் புகழ்ந்துள்ள செய்திகள் பாடல்களில் காணப்படுகின்றன.

அக்காலத்திய அரசர்கள் எண்ணற்ற நீர்நிலைகளை அமைத்துப் பராமரித்து வந்துள்ளனர். குளம், குட்டை, தடாகம், ஏரி என்று பாசனத்திற்கு மன்னர்கள் அமைத்த நீர் நிலைகள் வேளாண்மையைப் பெருக்கி நிலவளத்தை பெருக்கின. நீர்நிலைகளை உருவாக்குவதில் மட்டுமல்ல அவற்றைப் பராமரிப்பதிலும் மன்னர்கள் நன்கு திறம் பெற்று விளங்கினர். நீர்நிலைகளை அமைப்பது எப்படி? அவற்றை எப்படிப் பராமரிப்பது என்பது குறித்த பரந்த அறிவு அக்காலத்திய அரசர்களிடம் இருந்தது. பழந்தமிழர் ஐவகை நிலங்களுக்கு ஏற்றாற் போன்ற நீர்நிலைகளை உருவாக்கி, அவற்றைப் பராமரிக்கும் தொழில்நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர்.

## பழந்தமிழரின் நீர்நிலைகள்

### அருவி

இயற்கையாக மலையில் பொழியும் மழை நீர் மலை உச்சியில் இருந்து பள்ளத்தை நோக்கிப் பொழிவது அருவி.

### ஆறு

இயற்கையாக நன்னீரைக் கொண்டு செல்லும் ஒரு பெரிய நீரோட்டம் ஆகும். மழை பொழிந்து அந்த நீர் மிகப்பெரிய நீரோட்டமாக உருவெடுத்து ஓடுவதே ஆறு ஆகும். ஆறுகள் பல்வேறு சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் கூட்டமைப்பே ஆகும். ஆறுகள் பலவகைப்படும்.

**சிற்றாறு**

மலைப்பகுதிகளில் பெய்யும் மழை நீரைக் கொண்டு செல்லும் அளவில் சிறிய, குறைந்த நீரோட்டம் கொண்ட ஆறு. இவை பேராறுகளில் இணைந்து விடும்.

**காட்டாறு**

கட்டற்று ஓடும் ஆறுகளே காட்டாறு எனப்படுகின்றன. இவை பெருவெள்ளத்தின் போது, பெருகி ஓடும். மழை பெய்யும் போது மட்டுமே இவற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும். மற்ற காலங்களில் வறண்டே காணப்படும்.

**கண்மாய்**

அளவில் மிகப்பெரியதாகக் கடல் போன்று விளங்கும் பல்வேறு கண்ணாறுகளை உடைய ஏரிகள் கண்மாய் என்று அழைக்கப்பட்டன. இவை பொதுவாகத் தென் தமிழகத்தில் பாண்டிய மன்னர்களால் அமைக்கப்பட்டன. ஆற்று நீர் கால்வாய்கள் வழியே கொண்டு வரப்பட்டு இவற்றில் நிரப்பப்படும். மழையில்லா காலங்களில் இவற்றின் நீர் வாய்க்கால்கள் வழியே பாசனத்திற்கு பயன்படும்.

**தாங்கல்**

பெருவெள்ளம் ஏற்பட்டாலும் அவற்றைத் தாங்கி நிற்கும் ஏரிகள் தாங்கல் எனப்பட்டன. இவை எப்படிப்பட்ட வெள்ளத்தையும் தாங்கும் அளவிற்கு அளவில் பெரியதாகவும், ஆழமாகவும் காணப்பட்டன. இவை பொதுவாக அதிக மழையைப் பெறும் வட தமிழகத்தில் அமைக்கப்பட்டன.

**குளம்**

குளம் என்பது சிறிய வகை நீர்நிலை ஆகும். இவை பல்வேறு பயன்பாடுகளுக்காக அமைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் ஊருக்கு அருகிலேயே அமைக்கப்படும். மக்களைக் குளிர்விக்கப் பயன்பட்ட நீர் நிலையே குளம் ஆகும்.

**ஊருணி**

ஊர் மக்கள் குடிப்பதற்குப் பயன்பட்ட நீர் நிலையே ஊருணி எனப்பட்டது. இவை குடிநீருக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

**தெப்பக்குளம்**

தெப்பம் சுற்றி வர வசதியாக, ஆளோடியுடன் கட்டப்பட்டு அளவில் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ காணப்படும் குளங்கள் தெப்பக்குளம் என்று அழைக்கப்பட்டது.

**கேணி**

கிராமங்களில் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளை பூர்த்தி செய்ய அகலமாகவும், ஆழமாகவும் வெட்டப்பட்ட கிணற்றுக்குக் கேணி என்று பெயரிட்டனர்.

**அகழி**

அரண்மனை அல்லது கோட்டைகளைச் சுற்றி அகழ்ந்தெடுக்கப்பட்டு நீர் தேக்கி வைக்கப்படும் நீர் நிலைக்கு அகழி என்று பெயர்.

**சுனை**

மலைப்பகுதிகளில் பாறைகளுக்கு இடையில் இயற்கையாக, ஊற்றெடுக்கும் வகையில் அமைந்த சிறு நீர் நிலை.

## முடிவுரை

இவ்வாறு பண்டையத் தமிழர்கள் ஒவ்வொரு நீர்நிலைக்கும் அதன் பயன்பாடு, அளவு, பாசனப் பரப்பு ஆகியவற்றைப் பெயர் வைத்து அழைத்துள்ளனர். இவற்றின் பயன்பாடுகள் பரந்துப்பட்ட அளவில் இருந்துள்ளன. இன்றைய தொழில் நுட்பங்கள் அருகில் கூட நெருங்க முடியாத அளவிற்கு பண்டையத் தமிழர்களின் நீர் மேலாண்மை நுட்பங்கள் சிறந்து விளங்கியுள்ளன என்பதை இதன்வழி அறிந்துகொள்ள முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. மணி மாறன். *தமிழ் ஆய்வுக்கட்டுரைகள்.* தொகுதி. 1, தஞ்சாவூர், தமிழ்ப்பல்கலைக்கழகம், 2016.
2. நடுவூர் சிவா. "*தினமலர் கட்டுரைகள்: இதற்காக தானா மெனக்கெட்டாய் தமிழா-15.*", *தினமலர்,* 09 ஜூலை 2019, https://www.dinamalar.com/news_detail.asp?id=2315685.
3. நடுவூர் சிவா. "*தினமலர் கட்டுரைகள்: இதற்காக தானா மெனக்கெட்டாய் தமிழா-8*". தினமலர், 01 July 2019, https://www.dinamalar.com/news_detail.asp?id=2310396.
4. சி பி, செந்தில்குமார். வாரமலர்: *பழந்தமிழரின் நீர் மேலாண்மை-மடத்துக் கருப்பன் என்றால் என்ன?.* 01 செப்டம்பர் 2019, https://www.dinamalar.com/supplementary_detail.asp?id=49162&ncat.
5. உ வே, சாமிநாதையர். *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியர் உரையும்.* எட்டாம் பதிப்பு., சென்னை, டாக்டர் உ வே சாமிநாதையர் நூல் நிலையம், 2017.

6. கே ஆர், திருவேங்கடசாமி. *வள்ளுவத்தில் நீர்வளமும் வாழ்வியலும்*. முதல் பதிப்பு., சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2006.

## REFERENCES

1. Mani Maran. *Tamil Research Papers*. Vol. 1, Thanjavur, Tamil University, 2016.
2. Nadhuvur Shiva. "*For this Thana Menaketai Tamila-15: Dinamalar Articles*". 09 July 2019, https://www.dinamalar.com/news_detail.asp?id=2315685.
3. Nadhuvur Shiva. "*For this Thana Menaketai Tamila-8: Dinamalar Articles*". 01 July 2019, https://www.dinamalar.com/news_detail.asp?id=2310396.
4. Senthilkumar. "Varamalar: Water Management of Palanthamijar-What is Matathu Karuppan?". 01 Sep 2019, https://www.dinamalar.com/supplementary_detail.asp?id=49162&ncat.
5. U V, Saminathayar. *Pathupattu source and Nachinarkinyar text*. Chennai, $8^{th}$ ed., U V, Saminathayar Publications, 2017.
6. KR, Thiruvenkatasamy. *Water Resources and Biodiversity in Valluva*. Chennai, New Century Book House, 2006.